# 4
# பெண்மையின் நாணம்

என் சகோதரிகளோடு பேசும்படி நான் வெகுநாட்களாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறேன். பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுவதில் அவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இல்லை. தங்களுடைய நடக்கையில், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளும் பெண்களைப்போல அவர்கள் எச்சரிக்கையாக இல்லை. அவர்களுடைய வார்த்தைகள் தேவனுடைய கிருபையைப் பெற்ற பெண்களிடம் இருக்கவேண்டியபிரகாரமாக தெரிந்துகொள்ளப்பட்டவைகளும், நன்கு தெரிந்தெடுக்கப்பட்டவைகளுமாயில்லை. அவர்கள் தங்கள் சகோதரர்களுடன் மிக பரிட்சயமாயிருக்கிறார்கள். அவர்களைச் சுற்றி இருந்து, அவர்களை நோக்கிச் சாய்ந்து, அவர்களுடைய சமுதாயத்தை தெரிந்துகொள்ளுபவர்களைப்போலவும் அவர்களுடைய கவனத்தினால் மிகவும் திருப்தியடைகிறதைப்போலவும் காணப்படுகிறார்கள்.

தேவபக்தியானவர்களாக அழைத்துக்கொள்ளும் பெண்கள் அதிகமான கேலிபேச்சிலும் வேடிக்கைப்பேச்சிலும் சிரிப்பிலும் திளைக்கிறார்கள். இவையெல்லாம் தகுதியுள்ளதாக இல்லை; இவைகள் பரிசுத்தஆவியானவரை துக்கப்படுத்துகிறது. உண்மையான சுத்திகரிப்பு அங்கே இல்லை என்பதை இப்படிப்பட்ட காட்சிகள் வெளிப்படுத்துகிறது. திளைக்கப்படும் இவைகள், ஆத்துமாவை தேவனுக்குள் பெலப்படுத்தாது. மாறாக, மகா இருளைக் கொண்டுவந்து, தூய்மையும் சுத்தமுமான பரலோக தூதர்களை துரத்தி, இப்படிப்பட்ட தவறுகளில் ஈடுபடுகிறவர்களை கீழான நிலைக்குக் கொண்டுவருகிறது.

சகோதரிகள் மெய்யான சாந்தத்தை ஊக்கப்படுத்தவேண்டும். அவர்கள் வலிய பேசுகிறவர்களாகவும், அதிகம் பேசக்கூடியவர்களாகவும் இருக்கக்கூடாது. மாறாக, தைரியமானவர்களாகவும், அடக்கமானவர் களாகவும், பேசுவதற்கு தாமதமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அவர்கள் மரியாதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். தயவாகவும் இளகினவர்களாகவும், இரக்கமுள்ளவர்களாகவும் மன்னிக்கிறவர்களாகவும் தாழ்மையுள்ளவர்களாகவும் இருப்பது தகுதியானதும், தேவனுக்குப் பிரியமானதுமாயிருக்கிறது. இந்த நிலையில் இருப்பார்களானால், ஆண்களிடமிருந்து வரும் தேவையற்ற கவனத்தினால் பாரமடையமாட்டார்கள்.

பாதுகாப்பில்லாத எந்த சுதந்தரத்திலிருந்தும் தங்களைக் காக்கிற தூய்மையின் புனிதமான வட்டம் தேவனுக்குப் பயந்த இந்தப் பெண்களைச் சுற்றிலும் இருப்பது அனைவராலும் உணரப்படும். தேவபக்தியுள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற சில பெண்களிடம், பெரிய தவறுகளுக்குள் அழைத்துச்செல்லுகிற அலட்சியமான கட்டுப்பாடற்ற முரடான பழக்கங்களின் சுதந்திரம் அதிகமாக இருக்கிறது. தேவனுடன் தொடர்புகொள்ளும்படி, ஆத்துமாவை உயர்த்துகிற, வாழ்க்கையின் தூய்மையைப் பலப்படுத்துகிற, கருப்பொருட்களை தியானிக்கிறதில் தங்கள் மனங்களை ஈடுபடுத்துகிற பெண்கள், நேர்மை மற்றும் உண்மையின் பாதையிலிருந்து விலக இலகுவாக நடத்திச்செல்லப்படமாட்டார்கள். சாத்தானுடைய ஏமாற்றுகளுக்கெதிராக பாதுகாக்கப்பட்டு, அவனுடைய கெடுக்கும் உபாயங்களை எதிர்த்துநிற்க அவர்கள் ஆயத்தப்படுத்தப்படுவார்கள்.

உலகத்தின் நாகரீகமும், கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சை அல்லது மாயையின் மகிமையும் துரதிஷ்டசாலிகளின் விழுகையோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. இயற்கையான இருதயத்திற்கும் மாம்ச சிந்தைக்கும் இன்பமாயிருப்பவைகள் நெஞ்சார போற்றப்படுகின்றன. அவர்கள் இருதயத்திலிருந்து மாம்சத்தின் இச்சை வேரோடு பிடுங்கப்படுமானால், அவர்கள் மிக பெலவீனமுள்ளவர்களாயிருக்க மாட்டார்கள். நம்முடைய சகோதரிகள், தங்களுடைய நினைவுகளை தூய்மைப்படுத்தவேண்டுமென்பதை உணருவார்களானால், முறையற்ற செயல்களுக்கு கொண்டுசெல்லுகிற தங்களுடைய நடக்கையில் கவலையற்றிருப்பதை ஒருபோதும் அனுமதிக்காதிருந்தார்களானால், தங்களுடைய தூய்மையை கறைபடுத்தும் ஆபத்தில் இருக்கமாட்டார்கள். சாத்தான் யாரை ஊடகமாக உபயோகிக்கத் தெரிந்துகொண்டாலும், அவனுடைய சோதனையில் விழும் நபர்களோடு காணப்பட்டுவிடாதபடிக்கு, அசுத்தமான செய்கையின்மேலும் கிரியைகளின்மேலும் அப்படிப்பட்ட ஒரு அருவருப்பை உணருவார்கள்.

போதிக்கிற ஒருவர் பரிசுத்தமான புனிதமான காரியங்களுக்கடுத்து இருந்தபோதும், மனதில் பரிசுத்தமில்லாதவராக இருக்கலாம். அக்கிரமத்தை நடப்பிக்கும்படியும், தன்னுடைய மந்தையின் ஆத்துமாவையும் சரீரத்தையும் கெடுக்கும்படியும் தன்னை சாத்தானுக்குக் கொடுக்கலாம். என்றாலும், தேவனை நேசித்து, அவருக்கு பயப்படுவதாகக் கூறிக்கொள்ளும் பெண்களுடைய மற்றும் வாலிபருடைய மனங்கள் தேவனுடைய ஆவியினால் பாதுகாக்கப்படுமென்றால், அவர்கள் தங்கள் மனங்களை தூய்மையான எண்ணங்களுக்குப் பயிற்றுவித்து தீமையாகத் தோன்றுகிற அனைத்தையும் விட்டுவிலகும்படி தங்களுக்குக் கற்பிப்பார்களென்றால்,

முறையற்ற எந்த முன்னேற்றத்திலிருந்தும், தங்களைச் சுற்றிலும் இருக்கிற கெட்டவைகளிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பார்கள். அப்போஸ்தலன் தன்னைக் குறித்து: "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்"(1 கொரி. 9:27) என்று எழுதுகிறான்.

சுவிசேஷ ஊழியக்காரன் தன்னுடைய கீழான உணர்ச்சிகளை கட்டுப்படுத்தாமல், அப்போஸ்தலனுடைய மாதிரியை பின்பற்றத் தவறி, பாவத்தின் பேரைச் சொல்லுவதினால்கூட தன்னுடைய விசுவாசத்தையும் கிறிஸ்தவன் என்கிற பெயரையும் கனவீனப்படுத்தும்போது, ஊழியக்காரர் அவைகளில் திளைக்க துணிந்திருப்பதால் பாவமும் குற்றமும் அதன் பாவத்தன்மையில் குறைந்துவிட்டதென்று தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற பெண்கள் சிறிதளவுகூட ஒருநொடியும் தங்களை ஏமாற்றிக்கொள்ளக்கூடாது. பொறுப்பான பதவிகளில் இருக்கிறவர்கள் பாவத்தோடு பரீட்சயமாகி இருப்பதாகத் தங்களைக் காட்டிக்கொள்வதால், எவருடைய மனதிலும் பாவத்தின் குற்ற உணர்வையும் அளவையும் அது குறைத்துவிடக்கூடாது. வேதவார்த்தை குறிப்பிடுவதைப்போல, பாவம் பாவமாகவே—அப்படியே அருவருப்பாகவே காணப்பட்டு, பாவத்தில் திளைக்கிறவர்கள் தூய்மையும் உயர்ந்த எண்ணமும் கொண்டவர்களின் மனங்களால் அருவருக்கப்படவேண்டும். மரணத்திற்கேதுவான விஷமுள்ள சர்ப்பத்தினிடமிருந்து விலகி ஓடுவதைப்போல, அவரிடமிருந்து விலகிச் செல்லவேண்டும்.

சகோதரிகள் உயர்ந்த தூய்மையான இருதயத்தைக் கொண்டிருப்பார் களானால், ஊழியக்காரரிடமிருந்து வரும் கெட்ட செயல்களுங்கூட மீண்டும் அப்படி அவர்கள் செய்யக்கூடாதபடி எதிர்க்கப்படும். ஊழியக்காரரா யிருக்கிறபடியால், தேவனுடைய தெளிவான கட்டளையை மீறினாலும் அவர்கள் செய்வது பாவமல்ல என்று துர்போதனை செய்கிறவனின் சத்தத்தை கவனிக்காதபடி மனங்கள் மிக பயங்கரமாக மூடப்படவேண்டும். "அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை" என்கிற யோவானுடைய வார்த்தைகள் நமக்கு இல்லையா? பிரமாணம் என்ன சொல்லுகிறது? "விபசாரம் செய்யாதிருப்பாயாக" என்கிறதல்லவா? தேவனுடைய பரிசுத்த பிரமாணங்களைக் கைக்கொண்டு பரிசுத்த காரியங்களில் ஊழியம் செய்கிறான் என்பதினாலே, தன்னுடைய தகுதி தனக்குக் கொடுத்திருக்கிற நம்பிக்கையை தன்னுடைய உணர்ச்சிகளில் திளைக்க அவன் சாதகமாக எடுத்துக்கொள்வானானால், அதேகாரியம்

அவனுடைய பதவி வானபரியந்தம் உயர்த்தப்பட்டதாயிருந்தாலும், அவனிடமிருந்து வருகிற எந்தவித அசுத்தமான ஆலோசனையும் ஒளியின் தூதனாக வேஷம் போட்டிருக்கிற சாத்தானுடைய வேலை என்று பார்க்க, தேவபக்தியுள்ளவர்களென்று அறிக்கைபண்ணுகிற எந்த பெண்ணுக்கும் போதுமானதாயிருக்காதா? வெகு சுலபமாக கட்டுப்படுத்தப்பட்டு, தங்களுடைய குற்றமற்ற தன்மையையும் உண்மையையும் இச்சையின் பலிபீடத்தில் வைக்கும் எவருடைய இருதயத்திலும் தேவனுடைய வார்த்தை தங்கியிருக்கிறதென்று என்னால் நம்பமுடியவில்லை.

**என் சகோதரிகளே, தீமையாய் தோன்றுகிறதைக்கூட நீங்கள் தவிர்க்கவேண்டும்.** சீர்கேடடைந்திருக்கிற இந்த வேகமான உலகத்தில், தீவிரமான காலத்தில், காவலோடு நிற்காவிட்டால் நீங்கள் பாதுகாப்பாக இருக்கமுடியாது. நல்லொழுக்கமும் அடக்கமும் அபூர்வமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பின்னடியார்களாக, உயர்ந்த உன்னதமான அறிக்கைசெய்கிற உங்களிடம், இந்த விலையேறப்பெற்ற மிகுந்த மதிப்புவாய்ந்த கல்லான அடக்கத்தை மனதிலே போற்றும்படியான வேண்டுகோளை வைக்கிறேன். இது ஒழுக்கத்தைப் பாதுகாக்கும். கடைசியாக உயர்த்தப்பட்டு தூய்மையான பாவமற்ற தூதர்களின் கூட்டத்தோடு சேர்ந்துகொள்ளவும், பாவத்தின் மிகச் சிறிய கறைகூட இல்லாத சூழ்நிலையில் வாழவும் நம்பியிருப்பீர்களென்றால், அடக்கத்தையும் ஒழுக்கத்தையும் மனதார போற்றுங்கள். தூய்மையைத்தவிர—பரிசுத்தமான தூய்மையைத்தவிர வேறு எதுவும் தேவனுடைய நாளிலே, பிரம்மாண்டமான திரும்பிப்பார்க்குதலிலே நிற்கமுடியாது. தூய்மையும் பரிசுத்தமுமான பரலோகத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படமுடியாது.

பாவத்தில் திளைக்கும்படியாகவோ அல்லது தங்கள் சரீரத்தின்மேல் உத்தரவாதமில்லாத சுதந்திரத்தை அனுமதிக்கவோ வருகிற குறைந்த எண்ணத்தையுங்கூட மதிப்புள்ளவர்கள் பெண்மைக்கு வரும் அவமானமாக எண்ணி எதிர்க்கவேண்டும். முறையற்ற நேரத்திலும் இடத்திலும் உங்கள் கன்னத்தின்மேல் வரும் முத்தம் சாத்தானின் தூதுவனை அருவருப்போடு எதிர்க்க நடத்தவேண்டும். உயர்ந்த இடத்திலிருந்து, பரிசுத்தமான காரியங்களில் ஈடுபடுகிறவரிடமிருந்து அது வருமானால், அந்தப் பாவம் அப்படிப்பட்டவனுக்கு பத்துமடங்கு பெரியதாக இருக்கும் அது, உங்களை செய்யவைக்க விரும்பும் பாவத்திலிருந்து மாத்திரமல்ல, தேவனுடைய ஊழியக்காரனென்று மக்கள் மதித்து கனம் பண்ணுகிற அவனுடைய மாய்மாலத்திலிருந்தும் வெறித்தனத்திலிருந்தும் பயத்தோடு விலகிக்கொள்ள தேவனுக்குப் பயப்படுகிற பெண்ணையோ, அல்லது வாலிபப்பெண்ணையோ

நடத்தவேண்டும். அவனுடைய ஊழியத்தில் அவன் பரிசுத்த காரியங்களைக் கையாளுகிறான்; என்றாலும் கீழ்த்தரமான இருதயத்தை ஊழியர் அங்கியின்கீழ் மறைத்து வைத்திருக்கிறான். இதைப்போன்ற எந்தவித பரீட்சயத்தைக்குறித்தும் பயந்திருங்கள். இதை நோக்கி நகருகிற மிகச் சிறிய அணுகலும்கூட, இச்சையான மனதிற்கும் கண்ணிற்குமான சாட்சி என்கிறதைக்குறித்து நீங்கள் நிச்சயத்தோடிருக்கலாம். இந்த காரியத்தில் மிகச்சிறிய ஊக்கம் கொடுக்கப்பட்டாலும், குறிப்பிட்ட எந்தவித சுதந்திரமும் சகித்துக்கொள்ளப்பட்டாலுங்கூட உங்கள் மனது இருக்கவேண்டியவிதமாக தூய்மையாகவும் கற்போடும் இல்லையென்பதற்கு வேறு மேலான ஆதாரம் அவசியப்படாது. அந்தப் பாவமும் குற்றமும் உங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மதிப்பான ஜாக்கிரதையான உங்கள் பெண்மையை நீங்கள் தரம் தாழ்த்துகிறீர்கள். கீழ்த்தரமான மிருக உணர்ச்சிகள் உங்கள் இருதயத்தில் தங்கியிருக்க அனுமதிக்கிறீர்கள் என்கிற தவறாத சாட்சியைக் கொடுக்கிறீர்கள்.

மேன்மையானவைகளை அறிக்கை செய்கிறவர்கள்—கெடுக்கிற இந்தப் பாவங்களின் எந்த ஆபத்திற்கும் உட்படாதவர்கள் என்று எண்ணப்பட்ட வகுப்பாரின் நடுவே இருக்கிற பாவங்களையும் அவைகளின் ஆபத்தையும் நான் கண்டபோது, “நீர் வெளிப்படும்போது யார் நிற்பான் ஆண்டவரே”என்று கேட்க நடத்தப்பட்டேன். கைகளில் சுத்தமுள்ளவர்களும் இருதயத்தில் மாசில்லாதவர்களுமே அவருடைய வருகையின் நாளில் நிற்கமுடியும்.

பக்தியுள்ளவர்களென்று அறிக்கைசெய்கிற என்னுடைய சகோதரிகள் நாணத்தோடும் தெளிந்த அறிவோடும் பணிவான நடத்தையையும் தகுதியாக அடக்கத்தையும் போற்றும்படியாக அவர்களை உந்த நான் ஆவியானவரால் வற்புறுத்தப்பட்டதாக உணருகிறேன். கெட்டுப்போன இந்த காலத்தில் இருக்கிற உரிமைகள் கிறஸ்துவின் பின்னடியார்களுக்கு அளவுகோல்களாக இருக்கக்கூடாது. நித்தியத்தில் பொருந்தக்கூடிய கிறிஸ்தவர்களிடையே தன்னை காட்சிப்பொருளாக்கும் நாகரீகம் இருக்கக்கூடாது. காமவிகாரமும், தூய்மைக்கேடும், விபசாரமும், பாவமும் கொலையும், நித்தியத்தை அறியாத தேவனுடைய வார்த்தைகளின் கொள்கைகளால் கட்டுப்படுத்தப்பட மறுக்கிறவர்களின் நிலை. கிறிஸ்துவின் பின்னடியார்களாகவும் தேவனோடும் தூதர்களோடும் இணைந்திருப்பதாகவும் அறிக்கை செய்கிறவர்கள், அவர்களுக்கு மேன்மையான வழியை காண்பிப்பது எவ்வளவு முக்கியம். அவர்களுடைய கற்பும் நல்லொழுக்கமும், மிருக உணர்ச்சிகளால் கட்டு ப்படுத்தப்படுகிறவர்களைக்காட்டிலும் குறிப்பிடும் விதமாக வேறுபட்டிருக்க வேண்டியது எவ்வளவு முக்கியம்.

வாலிப சகோதரிகள் எப்போதுதான் மதிப்போடு நடந்துகொள்வார்களென்று நான் விசாரித்தேன். தங்கள் குழந்தைகளுக்கு சரியாக கற்பிப்பதற்கு மிக அதிகமான கவனம் கொடுக்கவேண்டியதன் முக்கியத்தை பெற்றோர்கள் உணரும்வரை மேன்மையானவைகளுக்கான தீர்மானமான மாற்றம் இருக்காது என்று எனக்குத் தெரியும். அடக்கத்தோடும் பணிவோடும் நடந்துகொள்ள பெற்றோர் அவர்களுக்குப் போதிக்கவேண்டும். உபயோகமானவர்களாகவும், உதவுகிறவர்களாகவும், மற்றவர்கள் தங்களுக்குச் செய்ய காத்திருக்காமல் மற்றவர்களுக்குத் தாங்கள் ஊழியஞ் செய்கிறவர்களாக இருக்கவும் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். பொதுவாக வாலிபரின் மனங்கள்மேல் சாத்தானுக்கு அதிகாரம் இருக்கிறது. பற்றான பெற்றோர்களே, உங்கள் பெண்பிள்ளைகளுக்கு எப்போதும் சுயமறுப்பும் சுயகட்டுப்பாட்டும் கற்பிக்கப்படுவதில்லை. செல்லமாக நடத்தப்பட்டு, அவர்களுடைய கர்வம் ஊட்டி வளர்க்கப்படுகிறது. முரண்டுபிடித்து, சுயவிருப்பத்தின்படி நடக்கும்வரைக்கும் தங்களுடைய சொந்த வழியை தெரிந்துகொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களை அழிவிலிருந்து காப்பதற்கு என்ன செய்யலாம் என்று அறிய முடியாதிருக்கிறீர்கள். அவர்களுடைய தைரியத்தினாலும், பெண்மையின் நாணமும் அடக்கமுமில்லாத தன்மையினாலும் அவிசுவாசிகளின் வாய்களிலே பழமொழியாகும்படி சாத்தான் அவர்களை நடத்திச் செல்கிறான்.

வாலிப ஆண்களும் இவ்வாறே தங்களுடைய வழியிலேயே செல்ல விட்டுவிடப்படுகிறார்கள். தங்கள் வயதையொத்த சிறு பெண்களின் பக்கத்திலே இருந்து, அவர்களுக்கு வீடுவரை துணையாகச் சென்று, அவர்களிடம் அன்பு காண்பிக்கும்போது வாலிப வயதைக்கூட எட்டியிருப்பது இல்லை. தங்கள் பிள்ளைகள்மேல் காண்பிக்கும் அன்பு என்று தவறாக எண்ணப்பட்ட உணர்வுகளினால் பெற்றோர்கள் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டிருப்பதால், மாற்றம் கொண்டுவரவும் மிகவேகமாக வளரும் தங்களுடைய பிள்ளைகளை கட்டுப்படுத்தவும் தீர்மானமான வழியைத் தொடர தைரியமற்றவர்களாக இருக்கிறார்கள்.

அநேக இளம் பெண்களிடம் ஆண்பிள்ளைகள் அவர்களுடைய உரையாடலின் பொருளாகவும், இளம் ஆண்களிடம் பெண்பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். தங்கள் மனது எதை அதிகமாக நினைக்கிறதோ, அந்த காரியங்களைக்குறித்துத்தான் அவர்கள் பேசுவார்கள். கிறிஸ்தவர்களென்று தங்களை அழைத்துக்கொள்ளுகிற இந்த ஆண் பெண் பிள்ளைகளுடைய வார்த்தைகளை பதிவுசெய்யும் தூதன் எழுதுகிறான். தேவனுடைய நாளிலே அவைகளை மீண்டும்

பார்க்கும்போது, அவர்கள் எவ்வாறு குழப்பமும் அவமானமும் அடைவார்கள். ஒருவிதமான பக்தியுள்ள மாய்மாலக்காரராக அநேக இளம் பிள்ளைகள் இருக்கிறார்கள். தங்களை தேவபக்தியுள்ளவர்களாக காட்டிக்கொள்ளாத வாலிபர்கள் இந்த மாய்மாலக்காரர்களால் இடறி விழுந்து, அவர்களுடைய இரட்சிப்பில் விருப்பமுடையவர்களால் எடுக்கப்படும் எந்தவித முயற்சிக்கும் எதிராக கடினமடைகிறார்கள். தகப்பன்மார்களையும் தாய்மார்களையும் அவர்களுடைய கடமையைக்குறித்த விழிப்புயணர்வுக்கு நம்மால் கொண்டுவர முடிந்தால்! ஓ! தங்கள்மேல் தங்கியிருக்கும் பொறுப்பின் பாரத்தை அவர்கள் ஆழமாக உணருவார்களானால்! அப்பொழுது எதிரியை முன்பாகவே தடுத்து, இயேசுவிற்காக மதிப்பான வெற்றிகளை அவர்கள் அடையலாம். இந்த விஷயத்தில் பெற்றோர்கள் தெளிவாக இல்லை. அவர்கள் தங்கள் வாழ்க்கையை நுணுக்கமாக சோதித்து, தங்கள் நினைவுகளையும் நோக்கங்களையும் பகுந்து ஆய்ந்து, தங்களுடைய செயல்முறைகளில் எச்சரிக்கையாக இருந்தார்களா என்று பார்க்கவேண்டும். தங்கள் பிள்ளைகள் பின்பற்றவேண்டும் என்று தாங்கள் விரும்புகிறதற்கேற்றதாக தங்களுடைய உரையாடலும் நடத்தையும் இருக்கிறதா என்று அவர்கள் உன்னிப்பாக கவனிக்கவேண்டும். உங்கள் பிள்ளைகள் முன்பாக உங்கள் வார்த்தைகளிலும் செயல்களிலும் தூய்மையும், நல்லொழுக்கமும் பிரகாசிக்கட்டும்.

இயேசுகிறிஸ்துவின் பின்னடியார்கள் கொண்டிருக்கவேண்டிய மரியாதையையும் தேவனைப்போன்ற ஆண்மையையும் காத்துக்கொள்ளாத கணவனும் தகப்பனும் இருக்கிற குடும்பங்கள் உண்டு. உயிரோடிருக்கும் காலமளவும் நேசித்து கனம்பண்ணி மதிப்பேன் என்று தேவன் முன்பாகவும் தூதர்கள் முன்பாகவும் உறுதியளித்த மனைவிக்கு தரவேண்டிய தயவான இளகிய மதிப்பை கொடுக்க அவன் தவறியிருக்கிறான். வேலைக்கு அமர்த்தப்பட்ட பெண், சுதந்திரமாக இருந்து, தன் முடியை அலங்கரிப்பதில் அதிக கவனம் கொடுத்து, அவனுக்குப் பிரியமாக பணிவிடை செய்யவும் துணியலாம். அவன் அவைகளில் விருப்பங்கொள்கிறான்—மதியீனமாக விருப்பங்கொள்ளுகிறான். மேலும் ஒருகாலத்தில் இருந்ததைப்போல தன் மனைவியின்மேல் தன் அன்பையும் கவனத்தையும் அவன் காண்பிப்பதில்லை. சாத்தான் இங்கே வேலை செய்துகொண்டிருக்கிறான் என்கிறதை நிச்சயமாக அறியுங்கள். உங்கள் வேலையாட்களை தயவாக கவனமாக நடத்துங்கள். அதை தாண்டி போகவேண்டாம். உங்கள் உதவிகளினால் ஒருவருக்கொருவர் அறிமுகமாகிவிடாதபடி உங்கள் நடத்தை இருக்கட்டும். தயவான வார்த்தைகளும் மரியாதையான செயல்களும் கொடுக்கவேண்டியதிருந்தால், அவைகளை உங்கள் மனைவியிடம்

கொடுப்பதே எப்போதும் பாதுகாப்பானது. அது அவளுக்கு மிகப் பெரிய ஆசீர்வாதமாயிருந்து அவளுடைய இருதயத்திற்கு மகிழ்சியை கொடுக்க, மீண்டும் அது உங்கள் மீது பிரதிபலிக்கும். மனைவியும் தனது இரக்கத்தையும் ஈடுபாட்டையும் விருப்பத்தையும் தன் கணவனை விடுத்து வேறொரு மனிதனிடம் காண்பிக்கலாம். அவன் குடும்பத்தின் ஒரு உறுப்பினராகவும் இருக்கலாம். தன்னுடைய நம்பிக்கைக்குரியவராக நினைத்து, தன் பிரச்சனைகளையும் தன்னுடைய அந்தரங்க விஷயங்களையும் அவள் அவனிடம் சொல்லலாம். அவனுடைய நட்பிற்கு அவள் முக்கியத்துவம் கொடுக்கிறாள்.

இதன் அடித்தளத்தில் சாத்தானே இருக்கிறான். அவள் எச்சரிக்கையடைந்து இருக்கிற அந்த இடத்திலேயே நிறுத்தாவிட்டால், அவன் அவளை அழிவிற்குக் கொண்டுசெல்வான். என் சகோதரிகளே, இந்த காரியத்தில் நீங்கள் மிக விழிப்பாக இருக்கமுடியாது. கொடுக்கும்படியான அன்பான வார்த்தைகளும் தயாள கவனங்களும் இருக்குமானால், அவைகள் தேவனுக்கும் தூதர்களுக்கும் முன்பாக உயிரோடிருக்குமளவும் நேசித்து, மதித்து, கனம்பண்ணுவேன் என்று நீங்கள் வாக்குக் கொடுத்த கணவனுக்குக் கொடுக்கப்படட்டும். தூய்மையையும் பரிசுத்தத்தையும் காத்துக்கொள்ளும் என்று கணிக்கப்பட்ட—ஒவ்வொரு குடும்பத்தின் அந்தரங்கங்களையும் மூடுகிற சுவர்கள் தகர்க்கப்படுவதனால், எத்தனை வாழ்க்கைகள் கசப்பானதாக ஆக்கப்படுகின்றன! மூன்றாவது மனிதன் மனைவியின் நம்பிக்கைக்குரியவனாகிறான். இந்த விசேஷ நண்பனுக்குமுன் அவளுடைய அந்தரங்க குடும்பக் காரியங்கள் திறக்கப்படுகிறது. இது கணவன் மனைவியினுடைய இருதயங்களை பிரிக்கிற சாத்தானுடைய கருவி. இது நின்று போகுமானால் எத்தனை பெரிய பிரச்சனைகள் தடுக்கப்படும்! ஒவ்வொருவருடைய தவறுகளையும் உங்கள் இருதயத்திற்குள் பூட்டிவையுங்கள். உங்கள் பிரச்சனைகளை தேவனிடம் மாத்திரம் சொல்லுங்கள். தூய்மையும் எந்தவித கசப்பும் இல்லாத சரியான ஆலோசனையையும் நிச்சயமான ஆறுதலையும் அவரால் உங்களுக்குக் கொடுக்கமுடியும். ★